சந்தோச மேகங்கள்
சந்தோச மேகங்கள் வந்தாடும்
நேரத்தில் செந்நூர பூ மலை தூவியது
சென்றார்கள் வென்றார்கள் என்றார்கள்
அன்நேரம் தேகமெல்லாம் மின்னல்ஓடியது
எங்கள் தேகமெல்லாம் மின்னல் ஓடியது
(சந்தோச மேகங்ஙள்)

வந்தவன் போனவன் எங்களை வென்றவன்
வாசல் மறித்தானடா - எங்கள்
தந்தைக்கு முந்திய சொந்தங்களும்
அதை தாங்கி இருந்தாரடா (2)(அன்று)
தாங்கி இருந்தாரடா
(சந்தோச மேகங்கள்)

பச்சை தமிழனின் ரத்தத்திலே இந்த
உப்பு கடல் சிவப்பானதுண்டு
பிச்சை எடுத்ததால் அச்சத்திலே அன்று
போக வரிசையில் நின்றதுண்டு
இன்று ஆனையிறவிலே ஏறியே நாமெல்லாம்
ஆடுகிறோம் ஆடி பாடுகிறோம்
பிரபாகரனின் காலத்தில் வாழ்ந்திடும்
ஆனவத்தால் முடி சூடுகிறோம்
ஆனவத்தால் முடி சூடுகிறோம்
(சந்தோசம்)

பாயும் புலிகளின் வீரத்திலே பகை பாசறை
தீயினில் வெந்ததம்மா
தாயின் மடியினில் நாங்கள் நடந்திடும்
நாளும் திரும்பியே வந்ததம்மா
இப்போ ஊரில் புகுந்திடும் வீதியும் வந்தது
தேரினிலேறியே வீதி உலா
கொற்றத் தேவி விழி திறந்தாளாடா
நாளும் எமக்கினி வெற்றி விழா
நாளும் எமக்கினி வெற்றி விழா